**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 12-07-2022**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-07-12 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-07-13 | 2022-07-14 | 2022-07-15 | 2022-07-16 | 2022-07-17 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 0.0 | 0.0 | 0.0 | 6.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 34.0 | 34.0 | 34.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 27.0 | 27.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12.0 | 12.0 | 12.0 | 12.0 | 12.0 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 230 | 250 | 250 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 4 | 4 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

13.07.2022 மற்றும் 17.07.2022 தேதிகளில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரளவு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 80% ஆகவும், பகல் நேரங்களில் 70% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33.0-34.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26.0-27.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 12.0 கி.மீ ஆக தென்கிழக்கு திசையில் இருந்து கிழக்கு திசையில் வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

14.07.2022 முதல் 20.07.2022 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட குறைவாகவும், குறைந்த பட்ச வெப்பநிலை மற்றும் அதிக பட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பெறுத்து பயிர்களுக்கு நீர் பாசனம் செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் செம்பேன் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த டைக்கோபோல் 18.5% EC 1250 மில்லி/ எக்டர் அல்லது அசாடிராக்டின் 0.03% 1000 மில்லி/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். 3. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% 150 மிலி/எக்டர் அல்லது ஃபுளுபெண்டிமைடு 39.35 SC 50 கிராம்/எக்டர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| கரும்பு | 1. கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட் 17.8 SL 0.6 மிலி/லி அல்லது கார்பென்டாசிம் 1.0 கி/லி என்ற அளவில் தெளிக்கலாம். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் கரும்பில் இளங்குருத்து புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC (0.5 மி.லி/ லிட்டர்) அல்லது பிப்ரோனில்5 % SC (2 மி.லி/ லிட்டர்) என்ற அளவில் தெளிக்கவும். |
| நிலக்கடலை | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி மற்றும் துருநோயைக் கட்டுப்படுத்த குளோரோதலோனில் 2.0 கிராம்/லிட்டர் அல்லது மேங்கோசெப் 2.5 கிராம்/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நிலக்கடலையில் புகையிலை வெட்டுப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்த மீதோமைல் 40 SP 750 மிலி/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும் |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் கத்திரியில் குருத்து மற்றும் காய்த்துளைப்பான் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட அல்லது சேதப்பட்ட இளங்குருத்து மற்றும் நுனித்தண்டுகளை சேகரித்து அழித்து விடவும். ஒரு எக்கருக்கு 5 எண்ணிக்கை என்ற அளவில் இனக்கவர்ச்சிப்பொறி வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும் அல்லது அசாடிராக்டின் 1.0 % EC 3.0 மி/லி அல்லது எமாமெக்டின் பென்ஜொவேட் 5 % SG 4.0 கிராம்/10 லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தென்னை | 1. பசைதடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றி கட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறி வண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரை விழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிக பாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |